International Conference on Innovative Trends in Business Practices for Sustainable Development held on 2nd and 3rd March, 2023 at Bharathidasan University, Trichy

Organiser: Dr. M. SELVAM

Dinamalar, Tiruchirappalli Edition, Page No.: 08, Dated: 3.3.2023

உலக நிகழ்வுகளை அறிய பத்திரிக்கைகள் படிக்கணும்

துணை வேந்தர் அறிவுறுத்தல்

பெரம்பலூர், மார்ச்.3-

அன்றாட உலக நிகழ்வுகளை அறிய பத்திரிக்கைகளை படிக்க வேண்டும் என பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வம் அறிவுறுத்தி பேசினார்.

பெரம்பலூர் தலைட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வணிகவியல் மற்றும் நிதியியல் ஆய்வுகளுக்கான முதுகலை மற்றும் ஆராய்ச்சித்துறை மற்றும் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் வணிகவியல் மற்றும் நிதியியல்துறை மற்றும், எம்.ஸார்ட் ஜெனல் ஆஃப் பிசினஸ் மேனேஜெமெண்ட் ஸ்டடீஸ் ஆகியவை சார்பில் இன்று கருத்தரங்கம் நடந்தியது.

தலைட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேந்தர் சீனிவாசன் தலைமை வகித்து கருத்தரங்கை தொடங்கி வைத்து, குறுந்தகட்டினை வெளியிட பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் செல்வம் பெற்று கொண்டார். செயலாளர் நீலராஜ் முன்னிலை வகித்தார்.

பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வம் பேசியதாவது:

மொழி புலமை இருந்தால்தான் முழுமையான கல்வியறிவு பெறவும், புதுமையான படைப்புகளை உருவாக்கவும் முடியும். இவர்களுக்கு மட்டுமே வரலாற்றில் இடம் கிடைக்கும். புத்தகங்களை நன்பர்களாக்கி கொண்டால் வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய முடியும். உலக நிகழ்வுகளை தெரிந்து கொள்ள பத்திரிக்கைகளை படிக்க வேண்டும்" என்றார்.

கேரளா, திருச்சூர் வேளாண்மை பல்கலைக்கழக கூட்டுறவு வங்கி மற்றும் மேலாண்மை துறை தலைவர் வீரக்குமரன், மலேசியா பல்கலைக்கழக தொழில் நுட்பம் மாராவின் வணிக மற்றும் மேலாண்மை நிறுவன பேராசியர் வீரபாண்டியன், டாக்டர். அஷ்மத் ஸரஸ் முகமது மொக்தார் ஆகியோர் பேசினர்.

இதில் மாணவர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் 700க்கும் மேற்பட்ட மாணவ, மாணவர்கள் கலந்துகொண்டனர். கல்லூரியின் முதல்வர் உமாதேவி பொம்பியா வரவேற்றார். முடிவில் கல்லி சார் மன் நீபலெட்சுமி நன்றி கூறினார்.

Maalaimalar, Tiruchirappalli Edition, Page No.: 08, Dated: 3.3.2023

புத்தகங்களை நன்பர்களாக்கினால் உயர்ந்த நிலையை அடையலாம்

தலைட்சுமி சீனிவாசன் கல்லூரி விழாவில் பல்கலைக்கழக வேந்தர் செல்வம் பேச்சு

பெரம்பலூர் மார்ச்3-

பெரம்பலூர் தலைட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வணிகவியல் மற்றும் நிதியியல் ஆய்வுகளுக்கான முதுகலை மற்றும் ஆராய்ச்சித்துறை மற்றும் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் வணிகவியல் மற்றும் நிதியியல் துறை மற்றும் எம்.ஸார்ட் ஜெனல் ஆஃப் பிசினஸ் மேனேஜெண்ட் ஸ்டடீஸ் ஆகியவை இணைந்து நடத்தியது. தலைட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேந்தர் சீனிவாசன் தலைமை வகித்து குத்து விளக்கு ஏற்றி வைத்து கருத்தரங்கை தொடங்கி வைத்து கருத்தரங்கம் தொடர்பான குறுந்தகட்டினை வெளியிட அதனை பாரதிதாசன் பல்கலைக்கழக துணை வேந்தர் செல்வம் பெற்று கொண்டார். செயலாளர் நீலராஜ் முதல்வர் உமாதேவி பொம்பியா ஆகியோர் பேசினர்.

இதில் மாணவர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் 700க்கும் மேற்பட்ட மாணவ, மாணவர்கள் கலந்துகொண்டனர். கல்லூரியின் முதல்வர் உமாதேவி பொம்பியா வரவேற்றார். முடிவில் கல்லி சார் மன் நீபலெட்சுமி நன்றி கூறினர்.

Hindu Tamil Thisai, Tiruchirappalli Edition, Page No.: 04, Dated: 3.3.2023

பெரம்பலூர் தலைட்சுமி சீனிவாசன் மகளிர் கலை, அறிவியல் கல்லூரி வளாகத்தில் நேற்று தொடங்கிய பன்னாட்டு கருத்தரங்கில் குறுந்தகடை வெளியிடுகிறார் பல்கலைக்கழக வேந்தர் அ.சீனிவாசன். உடன் பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் எம்.செல்வம், தலைட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் செயலர் நீலராஜ், தலைட்சுமி சீனிவாசன் மகளிர் கல்லூரி முதல்வர் உமாதேவி பொம்பியா உள்ளிட்டோர்.

தலைட்சுமி சீனிவாசன் கல்லூரியில் பன்னாட்டு கருத்தரங்கு தொடக்கம்

● பெரம்பலூர்

பெரம்பலூர் தலைட்சுமி சீனிவாசன் மகளிர் கலை, அறிவியல் கல்லூரி வளாகத்தில் 2நாட்கள் நடைபெறும் பன்னாட்டு கருத்தரங்கம் நேற்று தொடங்கியது.

பெரம்பலூர் தலைட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வணிகவியல் மற்றும் நிதியியல் ஆய்வுகளுக்கான முதுநிலை மற்றும் ஆராய்ச்சித் துறை மற்றும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் வணிகவியல் மற்றும் நிதியியல் துறை மற்றும் எம்ஸார்ட் ஜெர்னல் ஆஃப் பிசினஸ் மேனேஜ் மெண்ட் ஸ்டடீஸ் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த 'வணிக நடைமுறைகளில் புதுமையான போக்குகள்' என்ற கருப்பொருளில் 2 நாட்கள் நடைபெறும் பன்னாட்டு கருத்தரங்கு பெரம்பலூர் தலைட்சுமி சீனிவாசன் மகளிர் கலை, அறிவியல் கல்லூரி வளாகத்தில் நேற்று தொடங்கியது.

தலைட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேந்தர் அ.சீனிவாசன் தலைமை வகித்து, கருத்தரங்கு தொடர்பான குறுந்தகடை வெளியிட்டார். பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் எம்.செல்வம் குறுந்தகடை பெற்றுக்கொண்டார். நிகழ்வில் தலைட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் செயலர் நீலராஜ், தலைட்சுமி சீனிவாசன் மகளிர் கல்லூரி முதல்வர் உமா தேவி பொங்கியா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் எம்.செல்வம் தனது சிறப்புரையில், "புதுமையான படைப்புகளை உருவாக்கு பவர்களுக்கு மட்டுமே வரலாற்றில் இடம் கிடைக்கும். அன்றாட உலக நிகழ்வுகளை தெரிந்து கொள்ள நினமும் பத்திரிக்கைகளை படிக்க வேண்டும்" என்றார்.

கேரளா மாநிலம், திருச்சூர், வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கூட்டுறவு வங்கி மற்றும் மேலாண்மை துறைத் தலைவர் வீரக்குமரன், மலேசியா பல்கலைக்கழக பேராசிரியர் வீரபாண்டியன், மலேசியா மாராவின் பேராசிரியர் அஷ்மத் ஸரஸ் முகமது மொக்தார் ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

கல்விசார் புல முதன்மையர் நந்நிபலெட்சுமி நன்றி தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், பிற கல்லூரி மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.